மாலை மலர் 18/01/2018

# தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் சார்பில் சமுதாய பொங்கல் திருவிழா

வேலாயுதம்பாளையம், ஜன. 18–

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை நிறுவனத்தின் சமுதாய நலப்பணித் திட்டத்தின் சார்பில் ஆலையை சுற்றியுள்ள 3 பேரூராட்சிகள் (தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலை, புஞ்சை புகழூர், புஞ்சை தோட்டக்குறிச்சி), 5 ஊராட்சிகள் (புன்னம், வேட்டமங்கலம், நஞ்சை புகழூர், திருக்காடுதுறை மற்றும் கோம்புபாளையம்), டி.என்.பி.எல். மகளிர் மன்றம் மற்றும் மனமகிழ் மன்றத்தைச் சார்ந்தவர்கள் என 500 மகளிர் கலந்து கொண்டு சமுதாய பொங்கல் திருவிழாவை புகழூர் அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி வளாகத்தில் கொண்டாடினர்.

விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும், பொங்கல் வைப்பதற்கு தேவையான பொங்கல் பானை, சில்வர் வாளி, தட்டு, கரண்டி, அரிசி, பாசிப்பருப்பு, வெல்லம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், நெய், கரும்பு, மஞ்சள் கொத்து, எலுமிச்சை பழம், வெற்றிலை, பாக்கு, தேங்காய், பழம், சூடம், பத்தி, சந்தனம், குங்குமம், திருநீறு, தீப்பெட்டி) அனைத்து பொருட்களும் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்பட்டது.

விழாவை காகித ஆலையின் செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன் துவக்கி வைத்து குத்து விளக்கேற்றினார். விழாவில் பட்டாபிராமன், பொது மேலாளர் (மனித வளம்) வரவேற்றார். செயல் இயக்குநர் (இயக்கம்) எஸ்.வி.ஆர்.கிருஷ்ணன், முதன்மை பொது மேலாளர் (உற்பத்தி) சுப்பிரமணியன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்ச்செல்வன் மேலாளர் (கணக்கு) நன்றி கூறினார். மேலும் புஞ்சை தோட்டக்குறிச்சி காகித ஆலை பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

பொங்கல் பொங்கி வந்த போது பெண்கள் குலவையிட்டனர். பிறகு பொங்கல், சூரிய பகவானுக்கு படைக்கப்பட்டு சூரிய வழிபாடு நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்ட தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் வெள்ளியங்கிரி, சிவகாமி வெள்ளியங்கிரி ஆகியோர் தஞ்சாவூர் ஸ்ரீஹரி கலைக்குழுவினரின் நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகளைத் துவக்கி வைத்தனர்.

கரகாட்டம், கோலாட்டம், காளியாட்டம், கருப்பசாமி, பார்வதி சிவன் உள்ளிட்ட பல நாட்டுப்புற நடனங்கள் கலைக்குழுவினரால் நடத்தப்பட்டது. இதனை அனைவரும் கண்டுகளித்தனர். மேலும் மூன்று காளைகளுக்கு வழிபாடு நடைபெற்றது. திருவிழாவின் இறுதி நிகழ்ச்சியாக பானை உடைக்கும் போட்டி நடைபெற்றது. அதில் பலர் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



காகித ஆலை நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் வெள்ளியங்கிரி, சிவகாமி வெள்ளியங்கிரி, முதன்மை பொது மேலாளர் சுப்பிரமணியன், செயல் இயக்குநர் எஸ்.வி.ஆர். கிருஷ்ணன், பொதுமேலாளர் பட்டாபிராமன் ஆகியோர் நிகழ்ச்சிகளை துவக்கி வைத்தனர்.